விலை: 50.00
பக்கங்கள்- 16

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

valampurii

சங்கு 25 E-mail: valampurii@yahoo.com,

ஒலி 287 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை (01.10.2024) தொலைபேசி 222 3378 பக்ஸ்- 222 7829







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 287 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை (01.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டது

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன்படி பெற்றோல் ஒக்டேன் 92இன் விலை 21 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை ரூ. 311, ஓட்டோ டீசல் 24 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை ரூ.283, சுப்பர் டீசல் ரூ.33 குறைக்கப்பட்டு புதிய விலை ரூ.319, மண்ணெண்ணெய் 19 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை ரூ.183 ஆக உள்ளது. பெற்றோல் ஒக்டேன் 95 இன் விலையில் மாற்றம் இல்லை. (ம-7)

## இலங்கை - இந்திய நட்புறவு மேலும் வலுச்சேர்க்கப்படும்

### விஜித ஹேரத்திடம் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கை - இந்திய நட்புறவு மேலும் வலுச்சேர்க்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள் 14

### பங்காளிக் கட்சிகள் இணைய விரும்பாவிட்டால்

# தேர்தலில் தனித்து களமிறங்குவோம்

### தமிழரசுக் கட்சி அறிவிப்பு



(மன்னார்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பங்காளிக் கட்சிகள் எம்முடன் இணைய விரும்பாவிட்டால் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இதனை அறிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலையிலிருந்து கொழும்புக்கு மீண்டும் பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சாலையினால் கீரிமலையிலிருந்து கொழும்பிற்கு நடத்தப்பட்ட பேருந்து சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிலை 14

## பளையில் 104 கிலோ கஞ்சா மீட்பு

(பளை)

பளையில் 104 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லிப்பளைப் பகுதியில் உள்ள நீர்த் தேக்கம் ஒன்றிற்கு அருகில் சந்தேகத்திற்கு 14

## வவுனியா பழைய பேருந்து தரிப்பிடம் இடித்தழிப்பு



வவுனியாவின் அடையாளங்களில் ஒன்றாக இருந்த வவுனியா பழைய பேருந்துத் தரிப்பிடம் நேற்று தரைமட்டமாக்கப்பட்டது.(ம-7)

## வடக்கு ஆளுநர் செயலகத்தில் தொலைபேசியில் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் தங்கள் குறைகளை வடக்கு ஆளுநர் செயலகத்தில் தொலைபேசி மூலம் அலுவலக நேரத்தில் முறையிடலாம் என வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு ஆளுநரின் செயலாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் பொதுமக்கள் குறைகேள் வலையமைப்பான அபயம் பிரிவினது செயற்பாடுகள் நேற்று முதல் நிறுத்தப்படுவதுடன் அலுவலக நேரத்தில் பொதுமக்கள் ஆளுநருக்குத் தங்களது முறைப்பாடுகளை அதாவது ஊழல், நேர்மையின்மை, 14

## காலிமுகத்திடலில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் ரணிலின் தனிப்பட்ட பணிக்குழாமுடையது

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு விசேட அறிக்கை

(கொழும்பு)

காலிமுகத்திடலில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் ரணிலின் தனிப்பட்ட பணிக்குழாமுடையது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விசேட அறிக்கையை வெளியிட்டுள்ளது.

குறித்த வாகனங்கள் முன்னாள் ஜனாதிபதியால் அவரது பதவிக் காலத்தில் தமது தனிப்பட்ட பணிக் குழாத்தினருக்காக வழங்கப்பட்டவை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டி 14

## தமிழ் மக்கள் கூட்டணி தேர்தலில் தனித்துப் போட்டி

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி தனித்துப் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வைத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆண்டு நிறைவில்
குணநலன்களுடன்
முன்னோக்கி

"நம் பிள்ளைகளுக்கு வழங்கிட உகந்ததென கருதும் குணநலன்களால் நிறைந்த தயாரிப்புகளை மட்டுமே நம் நாட்டின் பிள்ளைகளுக்கும் மலிபன் இல்லத்திலிருந்து வழங்குங்கள்"

அமரர் ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி
மலிபன் நிறுவுனர்

இது மலிபன் பிஸ்கட் நிறுவன நிறுவுனர் அமரர் ஹின்னி அப்புஹாமி அவர்கள் மலிபன் நிறுவனத்தின் ஆரம்பத்தில் மொழிந்த வார்த்தைகள். இந்த தூரநோக்கான நல்லெண்ணமே கடந்த ஏழு தசாப்த காலமாக தரத்திலும் குணநலத்திலும் நிறைந்த மலிபன் தயாரிப்புகளை எம் நாட்டு பிள்ளைகள் சுவைக்க வழிசமைத்தது. 2024 ஆம் ஆண்டு நாம் 70 ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றோம். உங்களுக்காக என்றும் சிறந்தவற்றை வழங்கி வரும் மலிபன் நிறுவனம் கடந்த காலங்களில் சுவையிலும் குணநலத்திலும் சிறந்தவற்றை வழங்கி இலங்கை மக்களின் மனங்களில் நீங்கா இடம் பெற்றது போல எதிர்காலத்திலும் "குணநலன்களுடன் முன்னோக்கி" சென்று உங்களுடன் தொடர்ந்து பயணிப்போம் என உறுதியளிக்கின்றோம்.

70 Maliban குணநலன்களுடன் முன்னோக்கி

Maliban
குணநலன்களுடன் மென்மேலும் முன்னோக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் தீர்மானத்தை இடைநிறுத்திய தேர்தல்கள் ஆணைக்குழு



(கொழும்பு)

நெற்செய்கையாளர்களுக்கு உயர் பருவத்தில் 25,000 ரூபாய் கொடுப்பனவும் மீனவ மக்களுக்கு எரிபொருள் மானியமும் வழங்குவதற்கான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்படும் போது இவ்வாறான மானியத்தை வழங்க தீர்மானித்ததன் மூலம் ஏனைய வேட்பாளர்களின் பாதகத்தை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன்படி பொதுத் தேர்தலின் பின்னர் உரிய பொதுக் கொள்கைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

ஆணைக்குழு நேற்று முன்தினம் கூடிய போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# புலமைப்பரிசில் பரீட்சை விவகாரம் கல்வி அமைச்சின் முன் போராட்டம்





(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள்கள் கசிந்த விடயம் தொடர்பில் அமைச்சு எடுத்த தீர் மானத்திற்கு எதிர்ப்பு தெரி வித்து நேற்று மாணவர்களின் பெற்றோர்கள் கல்வி அமைச்சுக்கு முன்பாக போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்படுவதற்கு முன்னர் வினாத் தாளைக் கையடக்கத் தொலை பேசியில் புகைப்படம் எடுத்து வட்ஸ் அப் ஊடாக பகிரப்பட்ட விடயம் பாரிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் புலமைப்பரிசில் பரீட்சை வினாக்களின் முதற் பகுதியின் மூன்று வினாக்கள் தொடர்பில் ஆராய் வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு நேற்று முன்தினம் மூன்று வினாக்கள் தொடர்பான அனைத்து மாணவர்களுக்கும் முழு மதிப்பெண் வழங்கப்பட வேண்டும் என அறிவித் தது.

மேலும் மீண்டும் தேர்வு நடத்தப்படாது என்றும் திட்டமிட்டபடி வினாத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி உதவித்தொகை மதிப்பெண்கள் விரைவில் வழங்கப்படும் என்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி தரம் 12 அனுமதி - 2026

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 12 (2026) இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது. க.பொ.த சாதாரணதரப் பரீட்சை 2023 (2024) சித்தி பெற்றவர்கள் மட்டும் பாடசாலை நேரத்தில் (காலை 8.00-1.00 மணி) விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் 150.00 ரூபாவினை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி :- 02.10.2024

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி :- 11.10.2024

விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி
அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
காலதாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

குறிப்பு:- கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத்தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(சி-1307) அதிபர்



# அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வாகன விற்பனைக்கான மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான NPLK-9076 இலக்க கூலர் ரக வாகனம் (இசுசு) கூறுவிலை கோரி விற்பனை செய்யப்பட உள்ளது. ஆர்வம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவத்தினை அலுவலக நேரத்தில் மீளளிக்கப்படாத 500/- கட்டுப்பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

1. அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பம் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. 02.10.2024 தொடக்கம் 16.10.2024ஆம் திகதி வரை வாகனம் தரித்து நிற்கும் காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
3. விண்ணப்பம் 16.10.2024ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.
4. விண்ணப்பிக்கும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வாகன விற்பனைக்கான கூறுவிலை என குறிப்பிடப்பட வேண்டும்.
5. நேரடியாகவோ பதிவு தபால் மூலமாகவோ "தலைவர், அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வெடியரசன் வீதி, காரைநகர்" என்னும் முகவரிக்கும் விண்ணப்பிக்க முடியும்
6 கிடைக்கப்பெற்ற கூறுவிலை 18.10.2024 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்குத் திறக்கப்படும்.
இதில் விண்ணப்பதாரர் கலந்து கொள்ள முடியும்.

தலைவர்,
(c-1306) அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.


# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 01 - 1947 | 29 - 09 - 2024 |



## முருகேசு செல்வராசா

கரவெட்டி கிழக்கு தெடுத்தனை பிறப்பிடமாகவும் அந்தோனியார் கோவிலடி நெல்லியடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வராசா அவர்கள் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னாச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், சிவாகரன், சிவாமினி, சிவகோபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசுதாகினி, ஸ்ரீபன், பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம், செல்வரத்தினம், இலட்சுமி, தங்கராசா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசுதன், அபிர்நாத், அவந்திகா, அபிஜன், சோபிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அந்தோனியார் கோவிலடி,
நெல்லியடி கிழக்கு,நெல்லியடி. (c-1304)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழி நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழை பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் மாவட்ட அலுவலக கணனி பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

க.பொ.த(சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதி 2024.10.25 ஆகும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனதேப. கைப. அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார் (6)

# மன்னார் கடற்பரப்பில் கைதான 17 இந்திய மீனவர்கள் மறியலில்

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த நிலையில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் உத்தரவிட்டடுள்ளார்

நேற்று முன்தினம் அதிகாலை இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இரண்டு இந்திய இழுவைப் படகுகளையும் அதிலிருந்து 17 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இதன்போது யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் வருகை தந்து மீனவர்களுடன் கலந்துரையாடினர்.

குறித்த 17 இந்திய மீனவர்களையும் நேற்று முன்தினம் மாலை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது. குறித்த மீனவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவு இட்டது (6)

# 114 மாணவிகள் வேம்படியில் 9'ஏ' சித்தி

(யாழ்ப்பணம்)

வெளியாகியுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை முன்னிலை பெற்றுள்ளது.

அந்தப் பாடசாலையில் 114 மாணவிகள் 9'ஏ' தர சித்தி பெற்றுள்ளனர். (6)

## தெரிவுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சிறந்த சனசமூக நியைங்களுக்கான தெரிவுப் போட்டி புள்ளியிடலுக்கான நிபந்தனைக்குட்பட்டு நடை பெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றவுள்ள சனசமூக நிலையங்கள் தங்களின் போட்டி நிபந்தனைக்குரிய ஆவணங்களின் பிரதிகளுடன் சனசமூக நிலையத்தின் தலைவர், செயலாளர், பெயர்கள் மற்றும் முகவரி தொடரிலக்கங்களை குறிப் பிட்டு வலி காமம் கிழக்கு பிரதேச சபை, பொது நூலகம், பருத்தித் துறைவீதி, புத்தூர் எனும் முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் நேரடியாகவோ எதிர்வரும் ஒக்டோபர் 11ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு புத்தூர் நூலக நூலகர் அறிவித்துள்ளார். (6)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நவராத்திரி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.

• • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

வண்ணை- கன்னாதிட்டி காளி அம்பாள் தேவஸ்தான நவராத்திரி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள் அறிவித்துள்ளனர்.

• • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோயில் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான சாரதா நவராத்திரி தச சண்டீஹோம விஞ்ஞாபனம் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என ஆலய குருக்கள் அறிவித்துள்ளார். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 130 | 150 | 100-130 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 220 | 160 | 250 | 250-300 | 300 |
| தக்காளி | 250 | 300 | 250 | 200 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 150-200 | 250 |
| கோவா | 350 | 300 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 50 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 120 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200-220 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 200 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 350 | 800 |
| வெண்டக்காய் | 200 | 120 | 100 | 80-120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 160 | 250 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 400 | 250-300 | 400 |
| லீக்ஸ் | 320 | 350 | 260 | 220 | 400 |
| பீற்றூட் | 100 | 140 | 200 | 80-150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 500 | 700 | 420 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 500 | 400-550 | 800 |
| போஞ்சி | 250 | 500 | 400 | 240 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 200 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 500 | 400 | 500 | 350-400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 130 | 80-140 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 570 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 500 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 80 | -- | 50 | -- | 160 |

# இராசிபலன்

01.10.2024
புரட்டாதி 15, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 10.21 மணிவரை
பூரம் முற்பகல் 11.06 மணிவரை

சுபநேரம் 10.32-12.02மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
கேதாரேஸ்வர விரதம்

சந்திராஷ்டமம்:
உத்தராடம்,திருவோணம்

வளவன்

**மேஷம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர் கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும்

**கடகம்**
தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்**
பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்கையில் இன்பங்கள் கூடும் நாள்

**மகரம்**
உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், எந்த காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வழிபாடு முன்னேற்றம் தரும்.

**சிம்மம்**
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் உருவாகும், போசனசுகமுண்டு, கனவுகள் மிகுதியான நாள்

**விருச்சிகம்**
இனிய சம்பவங்கள் இடம்பெறும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், செய்தொழில் மேண்மையுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்

**கும்பம்**
குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புகள்தேடி வரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பீர்கள்.

**கன்னி**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, சுப காரியச் செயல்களில் தாராளம் காட்டுவீர்கள். வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**
தொழில் ரீதியாக முக்கிய நபர்களை சந்தித்துப் பேசும் சூழ்நிலையுண்டு, தொழிலில் எதிரியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பயனுண்டு.

**மீனம்**
பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பழைய பாக்கிகளை நயமாகப்பேசி வசூலிப்பீர்கள், அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம்.

**தெய்வங்களுக்கு மிகவும் அன்பானவர்கள் இளமையிலேயே இறக்கிறார்கள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சர்வதேச சிறுவர் தின சிறப்பிதழ்

# இன்று பிறக்கும் குழந்தைகளின் பெற்றோருக்கு 1 மில்லியன் இலவச ஆயுள் காப்பீடு

- **1 ஒக்டோபர் 2024 அன்று நாடளாவிய ரீதியில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் பெற்றோருக்கும் ரூ.1 மில்லியன் மதிப்புள்ள இலவச ஆயுள் காப்பீட்டை SLIC வழங்குகிறது.**
- **1 ஒக்டோபர் 2024 அன்று நாடளாவிய ரீதியில் அனைத்து மருத்துவமனைகளையும் உள்ளடக்கிய வகையில், ஆயுள் காப்பீடு பற்றிய செய்தியை அனைவருக்கும் எடுத்துச் செல்லும் வகையில், இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.**

ஒக்டோபர் 1, 2024 ஆம் ஆண்டு உலக சிறுவர் தினத்தை கொண்டாடும் வகையில், SLIC Life, இலங்கை முழுவதும் பிறந்த ஒவ்வொரு குழந்தையின் பெற்றோருக்கும் 1 மில்லியன் ரூபா இலவச ஆயுள் காப்பீட்டினை வழங்கவுள்ளது. SLIC Life இன் இந்த முன்னுதாரணமான நடவடிக்கை, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடைபெறுவதுடன், குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்வில் இக்கட்டான நேரத்தில் நிதிப் பாதுகாப்பையும் வழங்குகிறது.

2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி, SLIC Life இந்த திட்டத்தை நாடு தழுவிய ரீதியில் நடை முறைப்படுத்தி, இலங்கையில் உள்ள அனைத்து மருத்துவமனைகள் ஊடாக நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள குடும்பங்களை சென்றடையச் செய்துள்ளது.

இந்த இலவச SLIC Life பாதுகாப்பு, புதிதாகப் பிறந்த குழந்தைகளின் பெற்றோருக்கு நிச்சயமற்ற காலங்களில் நிதிப் பாதுகாப்பு இருப்பதை உறுதி செய்வதுடன் சமூகத்தின் நிதி நலனை மேம்படுத்துவதற்கும் ஆயுள் காப்புறுதியின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்கும் SLIC Life இன் பரந்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.

இந்த விசேட திட்டம் 2022 ஆம் ஆண்டு முதன்முதலில் SLIC Life நிறுவனம் சமூகப் பொறுப்புணர்வு (CSR) திட்டத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தியது, இது இத்தேச குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதன் மூலம் அவர்களின் பெற்றோருக்கு ஆதரவாக இருக்கும்.

SLIC Life தொடர்ச்சியான சமூகப் பொறுப்புத் திட்டங்களின் மூலம், குழந்தைக் கல்வி, சமூக மேம்பாடு, எதிர்கால சந்ததியினருக்கான கலாச்சாரத்தைப் பாதுகாத்தல், அனைத்து இலங்கையர்களுக்கும் நல்வாழ்வு மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல் போன்ற முக்கியப் பகுதிகளில் கவனம் செலுத்துகிறது.

இந்த முயற்சி குறித்து பேசிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.சந்தன எல். அலுத்கம, "பொறுப்பான அமைப்பாக, குழந்தைகளின் நல்வாழ்வுக்கான எங்கள் அர்ப்பணிப்பு வெறும் நிதி பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டது.

தற்போதைய சவாலான பொருளாதார சூழ்நிலையில், அனைவருக்கும் பாது காப்பு சூழல் அவசியம், அத்துடன் அனைவருக்கும் காப்பீடும் கட்டாயம் என்று நாங்கள் நம்புகிறோம்.

2022 ஆம் ஆண்டில், உலக குழந்தைகள் தினத்தில் பிறந்த குழந்தைகளுக்கு இலவச ஆயுள் காப்பீடு வழங்குவதற்காக இந்தத் திட்டத்தைத் தொடங்கினோம், அத்துடன் அவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான நிதிப் பாதுகாப்பையும் உறுதிசெய்கிறோம்.

மேலும், எங்கள் குழந்தைகளின் தடையற்ற கல்வி மற்றும் கனவுகளை நனவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பல காப்பீட்டு தீர்வுகளை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். எங்கள் அர்ப்பணிப்பு, உயிர்களை காப்பீடு செய்வதற்கு அப்பால் நீண்டுள்ளது. இது ஒவ்வொரு குழந்தையின் கனவுகளையும் அபிலாஷைகளையும் வளர்ப்பதாகும்."

இந்த விசேட முன்முயற்சியைக் குறிக்கும் வகையில், கொழும்பில் உள்ள "Castle Street" மருத்துவ மனையில் பெண்களுக்கான சம்பிர தாய நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இதில் SLIC Life பிரதிநிதிகள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் கொண்டாடினர்.

இலங்கையின் பிள்ளைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவத்தை இந்த நிகழ்வு வலியுறுத்தியது. மேலும் SLIC Life இன் Mini Muthu காப்புறுதி இளம் இலங்கையர்களின் கல்வி மற்றும் எதிர்கால அபிலாஷைகளை ஆதரிக்கும் வகையில் தீர்வுகளை வழங்குகிறது.

SLIC Life, குழந்தைகள் நாட்டின் எதிர்காலத்தின் அஸ்திவாரம் என்பதை அங்கீகரிப்பதுடன் அர்த்தமுள்ள, முன்னோக்கிச் சிந்திக்கும் காப்புறுதித் தீர்வுகள் மூலம் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. உலக குழந்தைகள் தினத்தன்று புதிதாகப் பிறந்த குழந்தைகளின் பெற்றோருக்கு இந்த இலவச ஆயுள் காப்பீட்டை வழங்குவதன் மூலம், பிறப்பு முதல் பெரியவர்கள் வரை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் SLIC Life முக்கிய பங்கு வகிக்கிறது.

1 மில்லியன் இலவச ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் SLIC Life காப்புறுதித் துறையில் ஒரு புதிய தடம் பதித்துள்ளது.

---

**இதோ,**
**மீண்டும் மலர்ந்து விட்டது**
**ஒரு**
**குழந்தைகள் தினம்**

**இது**
**உங்களுக்கான தினம்**

**குழந்தைகளே**
**இன்றைய நாட்டின்**
**இளவரசர்களே**

**நாளைய**
**சிம்மாசனங்களின்**
**சொந்தக்காரர்கள் நீங்கள்,**
**நாளைய**
**சிகரங்களின்**
**கிரீடங்கள் நீங்கள்.**

**நீங்கள்**
**நாளைய வனத்துக்கான**
**இன்றைய விதைகள்,**

**நாளைய கடலுக்கான**
**இன்றைய துளிகள்**

**செதுக்குவதைப்**
**பொறுத்து தான்**
**சிலைகள் வடிவாகும்.**

**உங்களைக்**
**கவனமாய்ச் செதுக்கும்**
**கல்வி உளி**
**எங்களிடம் இருக்கிறது.**

**பொறுமையாய் காத்திருங்கள்**
**காத்திருக்கும்**
**பாறைகளே சிலைகளாகும்.**

**-ஆசிரியர்-**

---

**குழந்தையும் தெய்வமும் ஒன்று**
**குழந்தையின் சிரிப்பில்**
**இறைவனை காண்போம்.**



**இனிய சிறுவர்**
**தின நல் வாழ்த்துக்கள்**




---

## குழந்தைகள் பற்றிய பொன்மொழிகள்

**குழந்தைகள்தான் ஏழைகளின் செல்வங்கள்** -தாமஸ் புல்லர்

**எந்த மனிதனுடைய வீட்டிலும் குழந்தை ஒரு வரம்** - ஜேம்ஸ் எம்.பேரி

**ஆகாயத்தின் ரத்தினம் சூரியன், வீட்டின் அலங்காரம் குழந்தை.** -செல்ஸீ

**குழந்தையே மானிட வாழ்க்கையின் மனிதச் சங்கிலி** - லாங் பெல்லோ

**குழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ள கை நோகிறது; அதைக் கீழே இறக்கி விட்டால் மனம் நோகிறது** -சி.பி.மில்லிவர்

**குழந்தைகள் இல்லையென்றால், உலகம் துன்பம் நிறைந்ததாக இருக்கும்** -டிக்கன்ஸ்

**புண்பட்ட உள்ளம், குழந்தைகளின் பேச்சால் குணமடைந்து, குளிர்ச்சியடைந்து மன அமைதி பெறும்** -ஆல்கார் ஒயில்டு

**குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே** -வில்லியம் ஜேம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சிறுவர் தினத்தில் பிறக்கும் அனைத்து குழந்தைகளின் பெற்றோருக்கும்

## ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் இடமிருந்து



# ஒரு மில்லியன் ரூபாய்

## ஆயுள் காப்புறுதி இலவசம்!

2024 ஒக்டோபர் 01ஆம் திகதி உலக சிறுவர் தினத்தில்
புதிதாய் பிறக்கும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு
ஒரு மில்லியன் ரூபாய் காப்புறுதி!
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் இடமிருந்து

Company Registration Number - PB 286362

*நியதி நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.sliclife.com

மேலதிக தகவல்களுக்கு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் கிளை அல்லது
1377 இற்கு அழைக்கவும்

SLIC ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் LIFE

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸின்
மற்றுமொரு சமூக சேவையாகும்

(சி-2444)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படைக்கு எதிராக இராமேஸ்வரத்தில் போராட்டம்

(சென்னை)

இந்திய கடற்றொழிலாளர்கள் 17 பேரை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்ததற்கும் இரண்டு படகுகளை பறிமுதல் செய்ததற்கும் எதிர்ப்பு தெரிவித்து தமிழக கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாட்டு இராமேஸ்வரம் கடற்கரையில் இடம் பெற்ற இந்த போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் வீதிகளில் அமர்ந்து குரல் எழுப்பி முழக்கங்களை எழுப்பினர்.

சிறைப்பிடிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் நெடுந்தீவு அருகே உள்ள பால்குடாப் பகுதியில் 309 படகுகளுடன் கடலுக்குச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக இலங்கையால் கைது செய்யப்பட்ட 17 இந்தியர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் ஆரம்பமாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கான பணிகள் இன்று முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் தபால் மூல வாக்குகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பில் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.அத்துடன் அனைத்து அஞ்சல் வாக்காளர்களும் இன்று முதல் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறுவன தலைவர்களின் உறுதிப்படுத்தல்களுடன் தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடம் விண்ணப்பங்களை ஒப்படைக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படும் 11 பில்லியன் ரூபாவை விடுவிக்கும் பத்திரத்தில் ஜனாதிபதி நேற்று முன்தினம் கையொப்பமிட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாதுகாப்பு துப்பாக்கிகளை ஒப்படைக்குமாறு அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புத் துப்பாக்கிகளை உடனடியாக பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதங்களை உரிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற சேவைகள் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அனைத்து வசதிகளும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவு, ஊழியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள், எரிபொருள் வசதிகள் மற்றும் முத்திரைத் தாள் கட்டணம் என்பன இழக்கப்படும்.ஆனால் மடிவேல கவுன்சிலர் குடியிருப்பு வளாகத்தில் வழங்கப்பட்டிருந்த குடியிருப்புகளை மட்டுமே தேர்தல் நடைபெறும் நாள் வரை பயன்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)


## கிருஷ்ணா அடைவுகடை

**பதிவு இல J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2023 ஆம் ஆண்டு 31.12.2023 இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2024 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆம் திகதி (31.10.2024) இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்து கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 31.10.2024 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**(குறிப்பு:- 2023 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31 ஆம் (2023.12.31) திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.)**

**இல:- 370, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311**
**021 222 5180**
**077 080 4656**

**உரிமையாளர்,**
**இல: 09 கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5040**

(2134)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2025 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 01.10.2024 - 14.10.2024 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 15.10.2024 - பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 15.10.2024 - பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 12,562,000.00 | |
| 2 | சுன்னாகம் பொதுச் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 526,500.00 | |
| 3 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 3,945,700.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 409,200.00 | 250.00 |
| 6 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 308,000.00 | 250.00 |
| 7 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 52,800.00 | 250.00 |
| 8 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 238,025.00 | 250.00 |
| 9 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 210,100.00 | 250.00 |
| 10 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 217,800.00 | 250.00 |
| 11 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 64,900.00 | |
| 12 | ஆலடிச்சந்தை | 750.00 | 7,500.00 | 112,000.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 31,477,800.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 2,839,200.00 | |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 52,800.00 | |
| 4 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 961,400.00 | 250.00 |
| 5 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 304,700.00 | 250.00 |
| 6 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 66,880.00 | |
| 7 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 57,475.00 | |
| 8 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 387,200.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 2,376,000.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 363,000.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 38,475.00 | 250.00 |
| 4 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 750.00 | 7,500.00 | 593,755.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2024.10.25 ஆம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2024.10.25 ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. அரசினால் வரி விதிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(C-1303) **01.10.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் புலத்தில் தனித்தடயம் பதித்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலை




கல்விப் புலத்தில் தனித்தடயம் பதித்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இன்று (01.10. 2024 செவ்வாய்) தனது 101 ஆவது அகவையில் கால்பதிக்கின்றது.

01.10.1923 இல் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் ஆசிரியர் கலாசாலை- இலங்கையில் இயங்கு நிலையில் உள்ள மூத்த ஆசிரியர் கலாசாலை என்ற பெருமையுடன் இன்று 101 ஆவது ஆண்டு நிறைவைக் காண்கின்றது. இலங்கையில் தற்போது இயங்கி வரும் எட்டு ஆசிரியர் கலாசாலைகளுள் தமிழ்மொழி மூல ஆசிரியர் பயிற்சியை வழங்கிக் கொண்டிருக்கின்ற கலாசாலையாக இதுவே விளங்குகின்றது.

கோப்பாயில் ஆசிரியர் கலாசாலை அமைவதற்கான அடித்தளம் இட்ட பெருமை காரைநகர் அருணாசலம் உபாத்தியாயரைச் சாரும். சைவச் சூழலில் ஆசிரியர்கள் கற்க வேண்டும் என்ற அவரது ஓர்மத்தினால் கோப்பாய் நாவலர் பாடசாலைச் சூழலில் ஆசிரியர் கலாசாலை ஒன்றை உருவாக்கினார். ஆயினும் சைவ ஆசிரியர்களும் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ ஆசிரியர்களும் கற்பதற்கான அனுமதி அன்று அரசினால் வழங்கப்பட்டது. கோப்பாய் பிரதேசத்தில் 1916 இல் அவர் அமைத்த ஆசிரியர் கலாசாலையைத் தொடரமுடியாத சூழ் நிலை அவரது இறப்பினால் ஏற்பட்டது. ஏழு ஆண்டுகளே அது இயங்கியது. அதன் விளைவாக கோப்பாயைச் சேர்ந்த சைவத்தமிழ்ப் பெரியார்கள் சேர் பொன் இராமநாதனிடம் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் அவர் தனது ஐந்து ஏக்கர் நிலப்பரப்பை கலாசாலை அமைவதற்காக வழங்கினார். அந்தக் காணி இன்றும் இராமநாதன் கலட்டி என்ற பெயராலேயே அழைக்கப்படுகின்றது.

பல்வேறு ஏறு முகங்களையும் இறங்கு முகங்களையும் கண்ட இக்கலாசாலை கடந்த ஆண்டு பிரம்மாண்டமாக நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. நூற்றுக் கணக்கான மாணவர்கள் இக்காலப்பகுதியில் கலாசாலையில் மாணவர்களாக விளங்கியமையாலும் பழைய மாணவர்கள் மற்றும் நூற்றாண்டுவிழாச் சபையினரின் ஆதரவினாலும் ஓராண்டு முழுவதும் விழா முன்னெடுக்கப்பட்டது. தற்போது 32 ஆசிரிய மாணவர்கள் மாத்திரம் கற்கும் சூழல் காணப்படுகின்றது.

கலாசாலைக்கு உள்வாங்கப்படும் ஆசிரிய மாணவர்கள் மூன்று வகுதிகளில் இருந்து உள்வாங்கப்படுகின்றனர்.

01. பல்கலைக்கழகங்கள் அல்லது உயர்தொழில்நுட்பக் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்று இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 - 1 (இ) வகுதியில் உள்வாங்கப்படுகின்றவர்கள் தமது தொழில்சார் வாண்மைத்துவ விருத்திக்காகக் கலாசாலையில் கற்கை நெறிக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

02. உயர்தரப் பரீட்சை சித்தியெய்தியோரிடையே நடத்தப்படும் போட்டிப்பரீட்சை அடிப்படையில் ஆசிரியர் சேவை வகுப்பு 3 - 11 இற்கு உள்வாங்கப்படுகின்றவர்கள்

03. பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கற்பித்த அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களாக அல்லது ஆசிரியர் சேவை வகுப்பு 3- 11 இற்கு உள்வாங்கப்படுகின்றவர்கள்

கலாசாலையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்வோர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தாலும் தேசிய கல்வி நிறுவகத்தாலும் நடத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தி பெற்று ஆசிரியர் சேவை 3-1 ஆ வகுதிக்குள் உயர்த்தப்படுகின்றனர்.

தேசிய கல்வி நிறுவகம் உயர்தரத்தில் சித்தியடைந்து ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டவர்களுக்கு நிகழ் நிலையில் பகுதியளவிலும் நேரடியாக மிகு தியளவிலும் நான்கு வருட கல்வி மாணிப் பட்டநெறி நிகழ்ச்சித் திட்டத்தை அண்மைக் காலங்களாக நடத்துகின்ற நிலையில் அதனை வீட்டில் இருந்தவாறு இலகுவில் தொடரக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற சூழலில் அது பட்டக்கல்வியாக அமைந்துள்ள நிலையில் ஆசிரியர் கலாசாலைகளுக்கு வருகை தராமல் நேரடியாகப் பட்டக்கல் வியைத் தொடரும் விருப்பு ஆசிரியர்களிடையே அதிகரித்து வருகின்றது.

இதைவிட ஆசிரியர் கலாசாலையில் கற்றவர்கள் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி மாணிக் கற்கையை மேற்கொள்வதாயின் வருட விலக்களிக் கப்படாமல் தொடக்கத்தில் இருந்து நான்கு வருடங்கள் கல்விமாணிக் கற்கைநெறியைத் தொடர வேண்டிய நிலை காணப்படுகின்றமையால் மேற்காட்டிய முறைமைகளில் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆசிரியர் கலா சாலைகளை நாடுவதைவிட நேரடியாகக் கல்விமாணிப் பட்டக் கற்கையைத் தொடர விரும்புகின்றனர். இருப்பினும் கலாசாலைகளில் இடம் பெறும் நேர டிக் கற்கைகள் ஆசிரியத்துவம் சார்ந்த பல்வேறு திறன்களை யும் (விளையாட்டு, இணை பாடவிதானம்) விருத்தி செய்யும் கலைத்திட்டத்தைக் கொண் டுள்ளன.

தற்போதைய சூழலில் ஆசிரிய கலாசாலைகள் ஆசிரியர் கல்வி சார்ந்த வேறு தளங்களில் பயணிக்க வேண்டிய நிறுவனங்களாக அமைந் துள்ளன. ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழகம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சூழலில் சேவையின் பின்னான பயிற்சியை வழங்கும் நிறுவனங்களாக கலாசாலைகள் உருமாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

இத்தகைய சூழமைவில் வடபுல மண்ணிற்கு சிறப்பாகவும் நாடு முழுவதற்கும் பொதுவாகவும் ஆசிரியர் கல்வியை வழங்கி ஏறத்தாழ முப்பதாயிரம் ஆசிரியர்களை உருவாக்கி இன்று 101 ஆவது ஆண்டு நிறைவைக் காணும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை நாமும் வாழ்த்துவோம்.

**சரஸ்வதி முத்துக்குமாரசுவாமி (இளைப்பாறிய ஆசிரியர்)**
**ஆசிரிய மாணவி- 1966 - 1967**

# மஹாளய பட்ஷம் 18.09.2024 ஆரம்பித்து 02.10.2024 நிறைவு நாள்வரையும் தென்புலத்தார்க்கு ஓர் வழிபாடும்

## நாளை தவறாது அமாவாசையில் பிதிர்க்கடனை நாம் செய்வோம்

கூட வருவது பாவ புண்ணியமே!

*திருமூலர்-திருமந்திரம்-144*

**"பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும்பின்செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநட வாதே!"**

பண்டம் என்பது அளவிட்டு வைக்கப்பட்ட உடல் நல்வினை. தீவினைகள் போகங்கள் யாவற்றையும் அனுபவித்து உடல் நீங்கும் பின்பு இன்பங்கள் உடன் இருந்து அனுபவித்த மனைவியும், மக்களும் உடன் வாரா! நாம் உயிருடன் வாழ்ந்த போது நோன்பின் பயனும் ஞானமும் நல்லறம் மேற்கொண்ட ஒழுக்கமும் புண்ணியமும் நமது உயிர்க்குத் துணையாக நெருங்கி நிழலாக வரும். மற்றவை எதுவும் வாராது.

**"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை- என்றாங்கு"**

*திருவள்ளுவர் திருக்குறள்*

தென்புலத்தார் என்பது பிதிரர்கள் ஆகவும் பிதிரர் என்பது கடவுளின் ஓர் வழிபாடு, இறையருள் எனவும் பரிமேலழகர் கூறியுள்ளார். தென்புலம் என்பது அழகிய இன்ப உலகம் எனவும் பொருள் கூறப்படுகிறது. பிரம்மாவின் அவதாரம் ஆனவரும் கலைமகள் அருள் பெற்றவருமான திருவள்ளுவர். பிதிர்க்கடன் நாம் செய்ய வேண்டிய ஐந்து கடமைகளில் முதன்மையானது என மேற்கூறிய திருக்குறளின் மூலம் தந்துள்ளார்.

நம்முன்னோர் இறந்தவர்களின் ஆத்மா தென்புலத்தின் அழகிய உலகில் அமாவாசை தவிர்ந்த தினங்களில் அருள் மிகு சந்திரனின் அமுது கிடைப்பது அமாவாசை அன்று சந்திரன் மறைவால் அமுது இல்லை அதனால் நம்முன்னோர் ஆகிய பிதிர் நம்வீட்டு முன் வாசலில் அமாவாசை தினத்தில் நம் வழிபாட்டையும் அவர்களுக்கு அமுது படைப்பதையும் பிதிர்க்கடன் செய்யும் வழிபாட்டையும் எதிர்பார்த்து காற்றுடன் கலந்து கவனிப்பார்கள்.

வருடந்தோறும் புரட்டாதி மாதத்தில் வரும் மஹாளய சிரார்த்தமும் இறந்த மாதம், இறந்த திகதியில் வருட சிராத்தமும் (திவசம்) அவசியம் செய்தல் வேண்டும். தீர்த்த யாத்திரை, தலயாத்திரையின் போது எந்நாளாயினும் அங்கு பிதிர்களுக்காக தர்ப்பணம் செய்தல் புண்ணியமாகும். அயோத்தி, மாயா, மதுரா, காசி, காஞ்சி, அவந்திகா, துவாரகா ஆகிய ஏழு ஸ்தலங்களில் செய்யும் தர்ப்பணம் பிதிர்களுக்கு சிறந்த பலனைத் தரும்

சிரார்த்தம், பிதிர்க்கடன் செய்யும் போதும் புரட்டாதி மஹாளயம் 15 நாட்களும் வேதபாராயணஞ் செய்தல், தமிழ் வேதங்களான திருமுறைகள், புராணங்களையும் ஓதுதல் இவை பிதிர்களுக்கு மிகத் திருப்தியான வையாகும். இவ்வாறு தீர்த்த சிரார்த்தம் குறிக்கப்பட்ட தினங்களில் செய்யப்படும் பிதிர்களின் தாக சாந்திக் கருமம், அமாவாசை, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், விதிபாத யோகம், உத்தராயணம்,சித்திரைவருடப்பிறப்பு,மாதப்பிறப்பு, கார்த்திகை மாத சுக்கில பக்ஷ நவமி, புரட்டாதி மாதக் கிருஷ்ண பக்ஷ திரயோதசி என்னும் இந்நாட்களில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுபவர்களுடைய பாவங்களை நீக்கி அவர்களுக்கு வீடுபேறு கொடுப்பதாகவும் தென்புலத் தாரைக் குறித்துத் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களைப் பிறவிக் கடலினின்றும் கரையேற்றுவதற் காகவும் கருணாநிதியாகிய சிவபெருமான் தமது வடிவையே தீர்த்த வடிவமாக்கியுள்ளார். இவ்வாறு செய்ய இயலாதவர்கள்..

திருச்செந்தூர் புராணத்தில் ஓர் பாடல்

**"இடி கொண் மாவினாற் பிண்டமேயாயி னுமிடுக**
**இலையென் றிழலெவ் ளுடன் புனல்கை யாலிறைக்க**
**வல்லவம் பெறாதாயினுமாயின் மருந்தப்**
**புல்லதாயினும் போடுக..."**

*திருச்செந்தூர்புராணம்*

சிரார்த்தத்திற்கு பொருள் இல்லாதவர் காய், கனி, கிழங்கு, எள்ளு இவைகளையேனும் சற்பாத்திரப் பிராமணருக்கு கொடுத்து பிர்தட்சண நமஸ்காரம் செய்தல் வேண்டும். தர்ப்பணஞ் செய்வதற்கும் வல்லமை இல்லா திருப்பின் பசுக் கூட்டங்களுக்கு புல், அகத்திக் கீரை கொடுத்தல் மேலாம்.

பசுவை வணங்கிப் புல்லுக் கொடுத்தால் அதன் உணவால் பால்தரும், பால் எங்களுக்கு ஓர் நிறையுணவும், அதுபோல் இந்துக்களாகிய எமது கோயிற் கிரியைகளிலும் பால் முக்கியத்துவம் பெறுகிறது. இதனை திருஞானசம்பந்தர் மூன்றாம் திருமுறையில்

"ஆடினா நறு நெய்யொடு பால் தயிர்"

பசுவின் பால், தயிர், நெய் எனும் பஞ்ச கௌவியத்தால் திருமுழுக்காட்டுப் பெறுவன் எம் பெருமானே! தொன்மைக் காலமாக எம்மைத் தொடர்ந்து தொல்லைப்படுத்தும் வினைக் கூட்டத்தை ஒழித்து எம்மைக் காத்து அருள் புரிய வேண்டுன்கிறோம்.

பசுக் கூட்டங்களுக்குப் புல்லை தர்ப்பணமாக பிதிர்களுக்கு நினைத்துக் கொடுத்தால் மேலாம்.யாக்கை நிலையாமை- *திருமந்திரம் 143*

மீண்டும் பிறக்கக் காரணமாகும்.

**"மண் ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்**
**திண் என்று இருந்தது தீவினை சேர்ந்தது**
**விண் நின்று நீர் வீழின் மீண்டும் மண் ஆனால் போல்**
**எண் இன்றி மாந்தர் இறக்கின்ற வாறே."**

ஒருவகைப்பட்ட மண்ணே இருவகைப் பட்ட கலங்களாகும். ஒன்று தீயைச் சேரும் வன்மை பெறும். தீயினைச் சார்ந்த பசு மண் கலம் அழியாது. மற்றொன்று தீயினைச் சாராதது. மழை பெய்யின் திரும்பவும் மண்ணாகிவிடும். மீண்டும் பிறப்பதற்குக் காரணமாகிவிடும். எனவே உயிர்கள் இறையருளை உறுதுணையாகக் கொள்ள வேண்டும்.

தென்புலத்தார் வழிபாடும்.இறை வழிபாடும் அவசியம் திருமுறைகள் ஓதி கருணாமூர்த்தியின் திருவடி அருள் பெறுவோம்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவில்லை"

*ஞானசம்பந்தர்*

நமக்கு இப்பிறவியில் மண்ணில் மனிதராகவும் மனைவி, மக்கள், கணவன், தாய், தந்தை, மாமன், மாமி ஆகிய யாவரும் முற்பிறவியின் (எச்சம்) வினைத் தொடர்ச்சியால் அமைந்தன.

நாம் அகர், உகர, மகர ஆக மோதிரவிரல், நடுவிரல், சுட்டு விரல்களால் தினம் மூன்று தடவையும் திருநீறு பரவி அணிந்து அதிதேவதை பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் அவர்களது அருளாகிய படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களின் செயல்களை உள்ளத்தில் உணர்ந்து நமது தொடரும் பிறவிப் பிணியை நீக்கி இறைவன் திருவடி சேர்வோம்.

**க.கு.க. சிவபாலன், (போசகர்)**
**மாணிக்கவாசகர் மடாலயம்**
**ஈழத்துச் சிதம்பரம்,காரைநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

594





விஜயாலய சோழர் காலத்தில் நடந்த யுத்தங்களில் பாண்டியர்களோடு சேர்ந்திருந்தார்கள். அதனால் சோழர்கள் வெற்றி பெற்ற பிறகு மழவரையர்களின் செல்வாக்குக் குன்றியிருந்தது. சிறு பெண்ணாயிருந்தபோது அதைப் பற்றியெல்லாம் நான் குறைப்படவில்லை. என் உள்ளம் மழபாடி ஆலயத்தில் உள்ள நடராஜப் பெருமான் மீது சென்றிருந்தது.

மழபாடியின் சரித்திரத்தில் நிகழ்ந்த ஒரு வரலாற்றை ஒரு பெரியவர் நான் குழந்தையாயிருந்த போது எனக்குச் சொன்னார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது சீடர்களுடனே எங்களூர்ப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தார். மழபாடி சிவாலயத்தைச் சுற்றிச் செழித்து வளர்ந்து கொத்துக் கொத்தாகப் பூத்துக்குலுங்கிய கொன்றை மரங்கள் ஆலயத்தை மறைத்திருந்தனவாம். ஆகையால் கோயிலைக் கவனியாமல் சுந்தரர் சென்றாராம். 'சுந்தரம் என்னை மறந்தாயோ!'- என்ற குரல் அவர் காதில் கேட்டதாம். சுந்தரர் சுற்றும் முற்றும் பார்த்து 'யாராவது ஏதேனும் சொன்னீர்களா?' என்று கேட்டாராம்.

சீடர்கள், 'இல்லை' என்றார்களாம். தங்கள் காதில் குரல் எதுவும் கேட்கவில்லை என்றும் சொன்னார்களாம். சுந்தரர் உடனே அருகில் ஏதாவது ஆலயம் மறைந்திருக்கிறதா என்று விசாரித்தாராம். கொன்றை மரங்களுக் கிடையில் மறைந்திருந்த மழபாடித் திருக்கோயிலைக் கண்டுபிடித்து, ஓடி வந்து இறைவன் சன்னதியில் "பொன்னார் மேனியனே!" என்ற பதிகத்தைப் பாடினாராம். இந்த வரலாற்றைக் கேட்டது முதற் கொண்டு,

மன்னே! மாமணியே!
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னேஉன்னையல்லால்
இனி யாரைநினைக்கேனே!

என்ற வரிகள் என் மனத்தில் பதிந்துவிட்டன. கோவிலுக்கு அடிக்கடி போவேன். நடராஜ மூர்த்தியின் முன்னால் நின்று அந்த வரிகளை ஓயாது சொல்லுவேன். நாளாக ஆக, என் உள்ளத்தில் மழபாடி இறைவர் குடிகொண்டு விட்டார். சிவபெருமானையே நான் மணந்துகொள்ளப் போவதாக மனக்கோட்டை கட்டினேன். என்னை நான் உமையாகவும், பார்வதியாகவும், தாட்சாயிணியாகவும் எண்ணிக்கொள்வேன். அவர்கள் சிவபெருமானைப் பதியாக அடைவதற்குத் தவம் செய்ததுபோல நானும் கண்ணை மூடிக்கொண்டு தவம் செய்வேன்.

யாராவது என் கலியாணத்தைப் பற்றிய பேச்சு எடுத்தால் வெறுப்பு அடைவேன். இவ்விதம் என் குழந்தைப் பருவம் சென்றது.

மங்கைப் பருவத்தை அடைந்த போது என் உள்ளம் சிவ பெருமானுடைய பக்தியில் முன்னை விட அதிகமாக ஈடுபட்டது.

வீட்டாரும், ஊராரும் என்னைப் 'பிச்சி' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அதையெல்லாம் நான்பொருட்படுத்தவேயில்லை.

வீட்டில் உண்டு உறங்கிய நேரம் போக மிச்சப் பொழுதையெல்லாம் கோவிலிலேயே கழித்தேன். பூஜைக்குரிய மலர்களைப் பறித்து விதம்விதமான மாலைகளைத் தொடுத்து, நடராஜப் பெருமானுக்கு அணியச்செய்து பார்த்து மகிழ்வேன்! நெடுநேரம் கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருப்பேன்.

இவ் விதம் ஒரு நாள் கண்ணை மூடிக்கொண்டு மனத்தில் இறைவனையே தியானித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று கலகலவென்று சத்தம் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தேன். என் எதிரே ஐந்தாறு பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் முன்னால் நின்ற ஒருவர் மீதுதான் என் கண்களும் கருத்தும் சென்றன. நான் மனத்தில் தியானித்துக் கொண்டிருந்த சிவபெருமான், தாமே தம் பரிவாரங்களுடன் என்னை ஆட்கொள்ள வந்துவிட்டார் என்று எண்ணிக்கொண்டேன்.

எழுந்து நின்று தலை குனிந்து வணங்கி நின்றேன். எண் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் பொழிந்தது. இதை அவர் கவனித்து இருக்கவேண்டும்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## எத்தன் செய்த தந்திரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

எப்படியும் இந்த வைக்கோல் போர்களில் தான் அவன் ஒளிந்திருக்க வேண்டும் என்று, கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்த எத்தன் அவனை எப்படிக் கண்டுபிடிப்பதென்று யோசிக்கலானான். எத்தன் இப்படி யோசித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பக்கமாக ஆட்டுக் கிடாய்களை ஓட்டிக்கொண்டு ஓர் இடையன் வந்தான்.

அவனிடம், "ஆட்டின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் சலங்கையில், ஐந்து மணிகளை மட்டும் இரவல் தரமுடியுமா?" என்று கேட்டான் எத்தன். இடையன் கொடுத்த சலங்கை மணிகளைக் கயிற்றில் கோர்த்து தன் கழுத்தில் கட்டிக் கொண்டான் எத்தன்.

பின் அந்த களத்து மேட்டிலிருந்த ஒவ்வொரு வைக்கோல் போரின் மேலும் மாடு உராய்வது போல உராயத் தொடங்கினான்.

அப்படி அவன் உராயத் தொடங்கியபோது சலங்கை மணிகள் அவ்வப்போது ஓசையை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

இப்படி ஒவ்வொரு போராகச் சென்று எத்தன் உராய்ந்து கொண்டு வரும் போது, கொமுரு ஒளிந்திருந்த அந்த வைக்கோல் போரும் வந்தது. தான் ஒளிந்திருக்கும் அந்த வைக்கோல் போரில் வந்து உராய்வது ஒரு மாடு தான் என்று நினைத்த கொமுரு, "சே, சே இந்த சனியன்பிடித்த மாடு ஏன் தான் இப்படி வந்து உராய்கிறதோ தெரியவில்லையே!" என்று கூறினான் போருக்குள் இருந்தபடியே.

அவ்வளவுதான் பண மூட்டையோடு வந்தவன், இந்த போருக்குள் தான் இருக்கிறான் என்று புரிந்து கொண்ட எத்தன் "எழுந்து வாடா வெளியே!" என்று அதட்டினான். ஒளிந்திருந்த இடம் தெரிந்து விட்டதால், வேறு வழியின்றி வெளியே வந்தான் கொமுரு. "அடடே நீ தானா!" என்று வியந்தான் கொமுருவைப் பற்றி முன்பே தெரிந்து வைத்திருந்த எத்தன். "ஆமாம்... நானே தான்!" என்றான், அசட்டுச் சிரிப்புடன் கொமுரு. பிறகென்ன, வணிகரின் ஐநூறு பணமும், ஆளுக்குப் பாதியானது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டேன்

## விஜேதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

நீதி மறுசீரமைப்பு மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராகப் பதவி வகித்த விஜேதாஸ ராஜபக்ஷ, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுப் படுதோல்வியைத் தழுவிக்கொண்டார்.

இந்நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய நிலையில் அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படுவதற்குப் பதில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவரது தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி (ஜாதிக பிரஜாதந்திர வாதி பெரமுன) பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அதன் உபதலைவர் கோமிக யஸஸ் விஜேசிர அறிவித்துள்ளார். (ம-7)

# தேசிய பட்டியல் உறுப்புரிமையை அரியநேத்திரனுக்கு வழங்குக

## ஜனநாயக போராளிகள் கட்சி

(கொழும்பு)

தேசியபட்டியல் உறுப்புரிமையினை பா.அரியநேத்திரனுக்கு வழங்குவதே அரசியல் அறமாகும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு தம்மை ஒரு தேசியமாக திரட்டி தமிழினத்தின் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி தமது வாக்குகளை தமிழ்ப் பொது வேட்பாளருக்கு கணிசமாக வழங்கியிருந்தனர்.

அந்த வகையில் இவ்வகையான கருத்துருவாக்கத்திற்கு தமிழ் பொதுச்சபையினரும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழ்ப் பொதுக்கட்டமைப்பாக காத்திரமாக செயலாற்றியிருந்தனர்.

அதிலும் குறிப்பாக வடக்குக் கிழக்கின் சிவில் பொதுச் சபையினர் ஆற்றிய பணிகள் இனத்தின் இன்றைய காலத் தேவையாகும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கின்ற போதும் பொதுவேட்பாளர் தேர்வின் போதும் பின்னரான தேர்தல் பரப்புரைகளின் போதும் அவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை.

அந்த வகையில் எமது தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் அவர்கள் காலத்தின் தேவை உணர்ந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி தமிழினத்தின் எதிர்காலம் கருதி அவர் செயலாற்றியதை தமிழின வரலாறு குறித்து வைத்துக் கொள்ளும்.

வருகின்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் பொதுக்கட்டமைப்பாக போட்டியிடுகின்ற நாம் பெற்றுக் கொள்ளும் முதலாவது தேசிய பட்டியல் உறுப்புரிமையினை பா. அரியநேத்திரனுக்கு வழங்குவதே அரசியல் அறமாகும் என்பதனை போராளிகள் சார்பாக நாங்கள் வலியுறுத்துகின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# அநுர அரசின் உண்மைத் தோற்றம் காலப்போக்கில் வெளிப்படும்

## விமல் வீரவன்ஸ



(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகத்தில் காணப்பட்டது போல் ஒவ்வொரு புதிய அரசாங்கமும் தேனிலவு காலத்தை அனுபவிக்கிறது. எனினும் இந்த அரசாங்கத்தின் உண்மையான தோற்றம் காலப்போக்கில் வெளிப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச விமர்சித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஜேவிபி என்ற மக்கள் விடுதலை முன்னணி, இன்று தேசிய மக்கள்சக்தியாக வளர்ச்சியடைந்துள்ளது.

இந்தநிலையில், ஜேவிபிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையிலான வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது.

எனினும், நாட்டை முன்னேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என நம்பிக்கை உள்ளது.

ஜே.வி.பி, எமது முன்னாள் கட்சியாக இருந்தபடியால், தற்போதைய அரசாங்கத்தின் தேசத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளுக்கு எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# ஐ.எம்.எப்பின் உயர்மட்டக் குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஆசிய பசுபிக் திணைக்களத்தின்பணிப்பாளர்கிருஷ்ண ஸ்ரீனிவாசன் தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழு கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், இந்த விஜயம் ஒக்ரோபர் இரண்டாம் மற்றும் நான்காம் திகதிகளில் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் இலங்கையின் பொருளாதார வேலைத் திட்டத்தின் கீழ் அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் புதிய பொருளாதாரக் குழுவைக் குறித்த உயர்மட்ட குழு சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நாங்கள் சளைத்தவர்கள் அல்ல கொழும்பில் தனித்துப் போட்டி

## டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

சளைத்தவர்கள் அல்ல நாம், சவால்களை தனித்துவமாகவே சந்தித்தவர்கள் நாங்கள். நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலும் களம்காணத் தயாராகி வருகிறோம் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் கடற் றொழில், நீரியல் வள அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வலிவடக்கு மாவிட்டபுரம் மாவை கலட்டி கிராம மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜே.வி.பியானது ஆயுதப் போராட்டத்திற்குப் பிறகு தேசிய நீரோட்டத்தில்இணைந்து ஜனநாயக வழிமுறைக்கு வந்து ஆட்சியை கைப்பற்றியிருக்கிறார்கள்.

நாட்டின் புதிய ஆட்சியாளர்களுக்கும் ஈ.பி.டி.பி கட்சிக்கும் இடையில் கொள்கைகளில் பாரிய வேறுபாடுகள் இல்லை.

இடதுசாரி பாரம்பரியத்தில் வந்தவர்கள் அதுபோல ஈ.பி.டி.பியும் இடதுசாரி பாரம்பரியத்திலிருந்து வந்திருக்கிறது.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலிலும் வென்று இம்முறையும் பாராளுமன்றம் செல்வோம் என தெரிவித்ததுடன், இம்முறை நாங்கள் வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் கிழக்கிலுள்ள 3 மாவட்டங்களிலும், அத்துடன் கொழும்பிலும் போட்டியிடவுள்ளதாக தெரிவித்தார். (ம-7)

# கட்டுநாயக்கவில் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து வந்த பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்டுக்களை நாட்டிற்கு எடுத்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்திலிருந்து நாட்டிற்கு வர முயற்சித்தபோது அவர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகளால் சிகரெட் தொகை கைப்பற்றப்பட்டது. குறித்த சந்தேக நபர் வெளிநாடுகளுக்குச் சென்று பல வேறு பொருட்களைக்கொண்டு வந்து உள்நாட்டில் விற்பனை செய்யும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவரிடமிருந்து ஜெலட்னம் வகையைச் சேர்ந்த 36800 சிகரெட்டுகள் அடங்கிய 184 காடன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலையை இடமாற்றக்கோரி சவப்பெட்டியுடன் மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

**மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மது பான சாலையை உடனடியாக இடமாற்றக்கோரி நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**




இதன்போது சவப் பெட்டியுடன் குறித்த பகுதிக்கு வந்த நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பிரதேச செயலாளர் மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது மக்கள் தமது பிரச்சினைகளை அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் அரச அதிபரின் வாக்குறுதிக்கு அமைய மக்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-285)

# கைக்குண்டுகளுடன் இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரண்டு கைக்குண்டுகள் உள்ளிட்டவற்றுடன் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் . மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 18 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 2 கைக்குண்டுகள், 4 வாள்கள் , 4 பெற்றோல் குண்டுகள் என்பவற்றை மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள மானிப்பாய் பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33)

# தைகொண்டோ போட்டியில் புதுக்குடியிருப்பு மத்தி வெண்கலம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான தேசிய மட்ட தைகொண்டோ போட்டியில் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த ஜெ.டிவோன்சி வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான தேசிய மட்ட தைகொண்டோ போட்டிகள் இரத்தினபுரி புதிய நகர உள்ளக விளையாட்டரங்கில் நடை பெற்றன.

இதில் 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 63 கிலோ எடைப் பிரிவிற்குட்பட்ட போட்டியில் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.டிவோன்சி வெண் கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-90)

# மீசாலை பகுதியில் இரு வாகனங்கள் விபத்து



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை புத்தூர்ச்சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரு வாகனங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

மீசாலை வீரசிங்கம் பாடசாலையை அண்மித்து வடி ரக வாகனமும், ஹயஸ் வாகனமும் எதிர் எதிரே மோதிக் கொண்டதில் இவ் விபத்துச் சம்பவித்துள்ளதுடன் இரு வாகனங்களும் கடுமையாகச் சேதமடைந்துள்ள போதிலும் தெய்வாதீனமாக எவருக்கும் பாரிய காயங்கள் ஏற்படவில்லை.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-30)

# தேசிய மட்ட உடற்பயிற்சி போட்டி வடக்கிற்கு 3 பதக்கங்கள்



ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி




இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள். பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் வட மாகாணத்திற்கு 3 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சி போட்டிகள் குருநாகல் மலியதேவ பெண்கள் பாடசாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் வட மாகாண பாடசாலைகளான ஊர்காவற்றுறை சென் அன் ரனிஸ் கல்லூரி தங்கம் மற்றும் இளவாலை ஹென்றி அரசர் கல் லூரி வெள்ளி மற்றும் பெண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சிறிய புஸ்பம் மகளிர் மகாவித்தியாலயம் வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-90)



ஊர்காவற்றுறை சிறிய புஸ்பம் மகளிர் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# நஸ்ரல்லா கொலைக்கு கண்டனம்

# பாகிஸ்தானில் வெடித்த போராட்டம்

(இஸ்லாமாபாத்)—

**ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தை நோக்கி ஹிஸ்புல்லா கொடிகளை கையில் ஏந்தியபடி 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் பேரணியாக சென்றனர்.**



அப்போது அவர்களை தடுக்க முயன்ற பொலிஸார் மீது, போராட்டக்காரர்கள் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து டயர்களை எரித்து போராட்டக்காரர்கள் வன்முறைகளில் ஈடுபட்டனர். இதையடுத்து கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும், போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் முயன்றனர்.

போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட இந்த மோதலால் கராச்சியில் பதற்றமான சூழல் நிலவியது. (நி)

## ஐ.நா பொதுச் சபையில்

## நிரந்தர உறுப்பு நாடாக

### இந்தியா இணைய ரஷ்யா ஆதரவு

(ஜெனீவா)

ஐ.நா. பொதுசபையில் இந்தியாவை நிரந்தர உறுப்பு நாடாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில் இதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், போர்த்துக்கல் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

இந்த கருத்தை ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் வலியுறுத்தின.

இந்நிலையில் இந்தியாவை நிரந்தர உறுப்பு நாடாக்க ரஷ்யா ஆதரவு தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக ஐ.நா. பொதுச்சபையில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் பேசும் போது சந்தேகத்திற்கு இடமின்றி ஐ.நா. பாதுகாப்பு சபையில் உலகளாவிய தெற்கின் பிரதிநிதித்துவத்தை விரிவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

பிரேசில் மற்றும் இந்தியாவின் கோரிக்கையை ஆதரிப்பதாகவும் அதே நேரத்தில் ஆப்பிரிக்க ஒன்றியத்தின் முயற்சிகளை ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (நி)

## நேபாளத்தில் மண்சரிவு உயிரிழப்பு அதிகரிப்பு



(காத்மண்டு)

நேபாளத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் குறைந்தது 148 பேர் உயிரிழந்துள்ளதுடன் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் காத்மண்டுவைச் சுற்றியுள்ள பள்ளத்தாக்கை மூழ்கடித்த இரண்டு நாட்கள் கடுமையான மழைக்குப் பின்னர் நேற்று 50 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர்.

இதேவேளை இதுவரை 3,600 பேர் மீட்கப்பட்டுள்ளதுடன் மீட்பு பணிகள் விமானங்கள் மற்றும் படகுகளில் தொடர்கின்றன.

மேலும் காத்மண்டுவை நாட்டின் மற்ற பகுதிகளுடன் இணைக்கும் பெரும்பாலான முக்கிய நெடுஞ்சாலைகள் மண்சரிவுகளால் புதையுண்டு போயுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## லெபனானில் குண்டு மழை

### மில்லியன் கணக்கானோர் இடம்பெயர்வு



(பெய்ரூட்)

இஸ்ரேல் லெபனான் மீது தொடர்ச்சியாக வான் வழித் தாக்குதல்கள் நடத்தி வரும் நிலையில் அந்நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் இருந்து மில்லியன் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை இஸ்ரேல் படுகொலை செய்த இரண்டு நாட்களுக்குப் பின்னர், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல்களில் 50 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஹிஸ்புல்லா வடக்கு இஸ்ரேல் மீது அதிக ரொக்கெட்டுகளை ஏவியது.

ஏமனில் ஈரான் ஆதரவு ஹவுதி இயக்கத்தின் இராணுவ இலக்குகள் மீது "பெரிய அளவிலான" வான் வழித் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்தது.

உயர்மட்ட இராணுவத் தளபதி அலி கராக்கி மற்றும் மூத்த மதகுரு ஷேக் நபில் கௌக் ஆகியோரும் இஸ்ரேலிய வான் வழித் தாக்குதல்களில் கொல்லப்பட்டதை ஹிஸ்புல்லா உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை பெய்ரூட் மற்றும் தெற்கு எல்லைப் பகுதிகள் உட்பட நாட்டின் பிற பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறும்படி வான் வழித்தாக்குதல்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதாக லெபனானின் பிரதமர் மிகாட்டி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

மோசடி, துஷ்பிரயோகம், அவதூறு, நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தொடர்பாகவும் தெரிவித்துக் கொள்ளலாம். தெரியப்படுத்துவதற்காக பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

021 221 9375, 021 221 9376 மேலே கூறப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கு முறைப்பாடுகளை வடக்கு மாகாண ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்து அதற்குரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பளையில்...

இடமான முறையில் சில மூடைகள் காணப்படுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் அநாதரவாகக் கிடந்த மூடைகளைக் கைப்பற்றி அவற்றைச் சோதனை செய்தனர்.

அதன்போது அதனுள் இருந்து சுமார் 104 கிலோ கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர். (ம-7)

## கீரிமலை...

யில், தற்போது மீண்டும் குறித்த பேருந்து சேவைகள் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆண்டுவரை இடம்பெற்ற சேவை பேருந்து இன்மை மற்றும் சாரதிகள் இன்மை போன்ற காரணங்களால் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று பிற்பகல் 7.15 மணிக்கு கீரிமலையிலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை ஊடாகப் பருத்தித்துறையை வந்தடைந்து, பருத்தித்துறையிலிருந்து மந்திகை மாலி சந்தி நெல்லியடி துன்னாலை ஊடாக வவுனியா, அநுராதபுரம், புத்தளம், சிலாபம் வழியாகக் கொழும்பைச் சென்றடைய வுள்ளதாகப் பருத்தித்துறை சாலை முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. (ம-7)

## காலிமுகத்...

யுள்ளது.

அந்த அறிக்கையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் அடங்குகின்றன.

அவ்வாறு வழங்கப்பட்டிருந்த 107 வாகனங்களின் வகைகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்திய நபர்கள் தொடர்பான தகவல்கள் என்பன அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ம-7)

## தேர்தலில்...

நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற வழக்கு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அண்மையில் எமது தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானம் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்கெனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் அனைவரையும் கட்சிக்கு வருமாறு அழைப்பதாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரிலும் தமிழரசுக் கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் அழைப்பு விடுப்பதாகத் தீர்மானித்திருந்தோம்.

அதே கூட்டத்தில் அப்படி அவர்கள் வராவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகிய நாங்கள் தனித்துப் போட்டியிடுவதாகவும் ஏற்கெனவே தீர்மானம் எடுத்திருந்தோம் என்றார். (ம-7,285)

## இல...

ளார்.

கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இருவருக்கு மிடையில் சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான பரந்த ஒத்துழைப்புக் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளினதும் கலாசார நட்புறவுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வழிமுறைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

ஹங்வெல்ல, நெலுவன்துடுவ பிரதேசத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூடு நேற்றிரவு 8.15 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.09.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5611 — K 2 4 9 4 7 8
அத சம்பத — K 9 4 7 8 — சீட்டிழுப்பு இலக்கம் 186

தன நிதானய — திகதி - 2024.09.30 — சீட்டிழுப்பு இலக்கம் - 1641 — A 38 57 75 80 A — Double Chance 77906

மெகா பவர் — திகதி 30/09/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1959 — Y 02 07 34 48 51 — Double Chance 18224

லக்கி 7 VIP — திகதி 2024.09.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0437 — S 5 8 7 8 8 7 S

கொவிசெத — திகதி 30.09.2024 — சீட்டிழுப்பு இலக்கம் 3863 — D 33 34 39 62 D — 254073 — 239632 — 83029 — 811

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.09.30 — சீட்டிழுப்பு இலக்கம் 920 — மகரம் 10 17 46 60 மகரம் — 76942 — 15

சுபிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 30.09.2024 — வெற்றி வாரம் 319 — வர்ணம் ஊதா — ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கம் 3 0 8 8 2 8 — 67686 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,918,648.00 — DLB

சனிதா — திகதி 2024.09.30 — வெற்றி வாரம் 4746 — 04 12 42 67 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,528,274.00 — 68323 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2585 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 30.09.2024 — தினம் திங்கள் — 22 26 42 60 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,411,582.40 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4297 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.09.30 — தினம் திங்கட்கிழமை — 04 22 30 36 — மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,610,051.20 — 208464 — DLB

கப்றுக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — E 06 14 16 41 55 — 1761 — பச்சை — 30.09.2024 திங்கள் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 547,714,867.80 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.09.30 — வெற்றி வாரம் 2064 — வர்ணம் செம்மஞ்சள் — 16 25 38 51 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,576,663.20 — DLB

ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2411 — சீட்டிழுப்பு திகதி 2024.09.30 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,723,277.60 — 09 16 29 68 L — 683023 — DLB



தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம்
மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றது



மிகவும் கஷ்டமான காலங்களில் பிரதேச செயலராகவும் அரச அதிபராக துணிவோடும் திறமையாகவும் ஏழை மக்களின் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து சிறப்பாகச் சேவையாற்றி ஓய்வுபெற்ற

உயர்திரு. நாகலிங்கம் வேதநாயகன்

அவர்கள் வடக்கு மாகாண ஆளுநராகப் பதவி ஏற்றதையிட்டு மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
தங்கள் வாழ்வும் வட மாகாண வளமும் மேன்மையுற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்க வளமுடன்!

(3169)
தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம்
சிறிராம் ஜுவல்லர்ஸ்


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

மனித நேயத்தோடு மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எமது தமிழர் தாயகத்திலும் தேர்தல் திருவிழா களைகட்டும்

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டபோது விருப்பு வாக்கு அளிப்பது பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

ஏனெனில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் விருப்பு வாக்கை எண்ண வேண்டிய தேவை ஏற்படும் என இவ்விடத்தில் கூறியிருந்தோம்.

அதுதவிர, தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்திய தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு; தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கோரும் அதேநேரம், இரண்டாவது விருப்பு வாக்கை யாருக்கு அளிக்க வேண்டும் என்பது பற்றியும் அறிவிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தோம்.

இவை நடந்து முடிந்த கதை. அதுபற்றி இனி பிரஸ்தாபித்து எந்தப் பயனும் இல்லை.

இவை ஒருபுறமிருக்க, நடைபெறப்போகும் பொதுத் தேர்தல் முன்னெப்போதும் இல்லாத அளவில் நாடு முழுமையிலும் பரபரப்பாக இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெறாவிட்டால், நாட்டின் எதிர்காலம் மிகப் பெரும் சவால் நிறைந்ததாக இருக்கும் என்பது நிச்சயமான உண்மை.

அதேநேரம் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதால், தென்பகுதியில் உள்ள அரசியல் கட்சிகள் அதிர்ந்து போயுள்ளன.

அதிலும் முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களை உடனடியாக காலிமுகத்திடலில் ஒப்படைக்க வேண்டும் என்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அதிரடி உத்தரவு, அநுரவின் ஆட்சியில் நாம் தப்பிப் பிழைப்பது கடினமானதென்ற ஊகம் தென்னிலங்கை அரசியல் கட்சிகளைப் பீதி கொள்ள வைத்துள்ளது.

இதன் காரணமாக, எதிரியாக இருந்தாலும் பரவாயில்லை. அனைவரும் ஒன்று சேர்ந்து தேசிய மக்கள் சக்தியை பொதுத் தேர்தலில் வெற்றி பெறாமல் தடுக்க வேண்டும் என்பதில் கங்கணம் கட்டி நிற்கின்றன.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் கன்னை பிரிந்து நின்ற ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அந்தளவுக்கு தென்னிலங்கைத் தேர்தல் நிலைமை விறுவிறுப்பாகியுள்ளது.

இதை நாம் கூறும் அதேநேரம், வடக்குக் கிழக்கு தமிழர் தாயகத்திலும் பாராளுமன்றத் தேர்தல் களைகட்டும்.

அதிலும் புதுப்புது அணிகள் தேர்தலில் களமிறங்கி ஒரு பெரும் ஆட்டம் நடைபெறும். இதற்கு நம் தமிழ் மக்களும் தயாராக வேண்டும்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் கண்புரை சத்திர சிகிச்சை வெற்றி

## யாழ்.போதனா பிரதிப் பணிப்பாளர் யமுனானந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கண்புரை சத்திர சிகிச்சை வெற்றி பெற்றுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்ட கண்புரை நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சைகள் வெற்றியளித்துள்ளன.

எனவே யாழ். மாவட்டத்திலோ அல்லது வடமாகாணத்திலோ கண்புரை நோயினால் பாதிக்கப்பட்ட பார்வைக் குறைபாடுடையோர் குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் எவரேனும் இருப்பின் யாழ். போதனா வைத்தியசாலையின் கண்ணியல் சத்திர சிகிச்சைப்பிரிவை நாடுவதன் ஊடாக ஒரு மாத காலத்துக்குள் உரிய சிகிச்சை அளிக்கப்படும் என்றார். (ம-7)

# ஊழல் குற்றச்சாட்டு உண்மையெனில் விசாரணை செய்து கைது செய்க

## பெரமுன செயலாளர் சாகர காரியவசம்

தேசிய மக்கள் சக்தி கடந்த காலங்களில் வெளியிட்டு வந்த ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து, சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இருந்த போது, பாரிய எண்ணிக்கையிலான கோப்புகளைக் காண்பித்து, அவை அனைத்தும் அரசாங்கத்தில் உள்ளவர்கள் மேற்கொண்ட ஊழல்கள் குறித்த விபரங்கள் என்று தெரிவித்தது.

அந்தக் கோப்புகள் உண்மையாக இருந்தால், தற்போது அதிகாரம் பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தி அந்தக் கோப்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராஜபக்ஷவினருக்கு எதிரான பெரும் ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இலங்கையிலிருந்து 18 பில்லியன் டொலர்கள் உகண்டாவுக்குக்கொண்டுசெல்லப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

அந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் இப்போது ஜனாதிபதியாகி இருக்கின்ற அநுரகுமார திஸாநாயக்க அவற்றுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை கொடுக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு செய்யாமல், தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் இப்போதும் முன்னரைப் போலவே ஊழல்கள் செய்ததாகக் கூறப்படும் நபர்கள் தொடர்பாக ஊடகங்கள் முன்னால் வந்து குற்றச்சாட்டுகளை அடுக்குகின்றனர்.

ஆட்சி அதிகாரம் தங்களிடம் இருக்கும் போதும் அவர்கள் இவ்வாறு குற்றச்சாட்டுகளை மட்டும் முன்வைத்து வருவது ஊடகங்கள் ஊடாக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று எதிர்வரும் பொதுத் தேர்தலில் அதனைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான்.

அவ்வாறு செய்வது நாட்டுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# இலங்கையின் ஏற்றுமதி செயற்திறன் அதிகரிப்பு

இலங்கையின் ஏற்றுமதி செயற்திறன் கடந்த மாதம் 1165.4 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

இலங்கை சுங்கத்தினால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கமைய, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த செயற்திறனானது 4.18 சத வீத வளர்ச்சியாகுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆடை மற்றும் புடவை, தேயிலை, இறப்பர் பொருட்கள், தேங்காய் பொருட்கள், மசாலா பொருட்கள் மற்றும் செறிவூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி காரணமாக இவ்வாறானதொரு வளர்ச்சியினை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

நாட்டில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி அமெரிக்க டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதி நேற்று முறையே 293.50 ரூபாவாகவும் 302.56 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வாரம் (27) அமெரிக்க டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதி முறையே 295.30 ரூபாவாகவும் 304.33 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மத்திய கிழக்கு உட்பட ஏனைய பிரதான நாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

# காத்தான்குடியில் விபத்து மாணவன் உயிரிழப்பு

காத்தான்குடி, அஹமட் பரீட் வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

இதன்போது தரம் 11இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனே உயிரிழந்துள்ளான்.

தனது நண்பருடன் காத்தான்குடி, அஹமட் பரீட் மாவத்தை வீதி வழியாக பயணித்து வந்த போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து குறித்த வீதியில் காணப்பட்ட மின்கம்பம் ஒன்றுடன் மோதியே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TECHNO WORLD
### தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L தொழில்நுட்பப் பிரிவு**

**புதிய பிரிவு ஆரம்பம்**
**A/L 2026**

- திகதி - 02.10.2024(புதன்கிழமை)
- நேரம் - மாலை 3.30 மணி

(C-1305)

தொடர்புகளுக்கு:
**077 017 5346**



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 55 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை.
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்.
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- சீரான ஆவணங்கள்.
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்.

(2167)

பார்வையிடும் நேரம்
காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :
**077 623 4204 / 077 030 2523**



## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(389)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1308)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய விளையாட்டுக் கழகத்தின் தலைவர்
திரு. ர.ஸ்ரீரமணன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
**பொன்னுத்துரை ரவீந்திரன்**

பிறப்பு 14.01.1949 — இறப்பு 29.09.2024

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு
ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

(C-1311)

**பிரிவால் துயருறும்**
**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்**
**(K.C.C.C & K.C.C.C.S.C)**


## பதவி வெற்றிடங்கள்

இல: 555, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ மாருதி பதிப்பகத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலை முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை.

1. கணனி வடிவமைப்பாளர்
2. புத்தகம் கட்டுனர்
3. இயந்திர இயக்குநர் (Opset)
4. வரவேற்பாளர் (பெண்)

(C-1310)

தொடர்புக்கு :-
**077 791 7680**



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு :
T.P-076 636 3378



## காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

(2141)

*2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரித்தும் கொடுக்கப்படும்.*

**077 836 3050**
**075 889 5625**


## பாராட்டி வாழ்த்துகிறோம்



**திரு. நாகலிங்கம் வேதநாயகன்**

முல்லை மண்ணில்
நிறைவான பணியாற்றி
அதன் வளர்ச்சியில்
வரலாறு படைத்த
வேதநாயகனே
நும் நேர்மை கண்டு
மீண்டும் வட மாகாணத்தில்
ஆளுநராகப் பதவி ஏற்றுள்ளீர்கள்
பதவிக்காலம் சிறப்போடும்
வளத்தோடும் வாழ
வற்றாப்பளை கண்ணகி
அம்மன் அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர் : கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை, வற்றாப்பளை முல்லைத்தீவு.**

(C-1309)

## 34வது பிறந்தநாள் நினைவும் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

### அமரர் தயாபரன் சிவதர்ஷன்

(உரிமையாளர் - சிவதயா பிறிண்டேர்ஸ்)

பிறப்பு : 27.09.1990 — இறப்பு : 23.09.2014



திதி - சதுர்த்தசி 01.10.2024

அன்பால் அடிமனதை அளாவிய மகனே!
முன்போல் எம்முன் இல்லையே இன்று
ஈரைந்தாண்டு உருண்டோடி விடினும்
உன் நினைவு என்று முன்னத்தி லுண்டு
கண்போல் காத்த கருணையும் போச்சே!
உன்பாலிங்கி உயிருள்ள வரை உருகுவோம்.

உன் முகத்தைப் பார்த்து நின்று உறவாடி மகிழ்ந்தெம்மை
உன் படத்தைப் பார்க்கவென எம்மை விட்டோடி
- பத்தாண்டுகளாகியும்
சிவதர்ஷனே!
கண்ணெதிரே நிற்கின்றாய் கவலைகொள்ள வைக்கின்றாய்
விண்ணதிர அழுகின்றோம் விரைவில் வந்து சேருமையா!
ஓம் சாந்தி!





**எம்மைப் பெற்றெடுத்தோருக்கு நினைவலைகள்**



திருநாவுக்கரசு நாகரட்ணம்



நாகரட்ணம் தனலக்சுமி



கதிரவேலு விஜயசிங்கம்



விஜயசிங்கம் நாகேஸ்வரி

தயா வெளியீடு,
இல.92/3/50, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(388)

குடும்பத்தினர்
தயா அச்சகம்
077 396 5214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.